O.S.No.3/2020

பி.வா.சா.2, திரு. ஆறுமுகம்
நாள் : 20.08.2024 நேரம் : 12.05 P.M.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1) நான் முனியாண்டிக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சியம் அளிப்பதற்காக முனியாண்டி அழைத்தார் என்றால் சரிதான். முனியாண்டி என்பவர் எனது மகளின் கணவர் என்றால் சரியல்ல உறவினர். முனியாண்டி என்பவர் எனது மகளின் கணவர் என்பதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் 5ம் நம்பர் ஆகும். எனது வீட்டு 1ம் பிரதிவாதி முனியாண்டியின் வீட்டிற்கு தெற்கே உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கான பாதை வாதி பழனிச்சாமியின் வீட்டின் வழியாகத்தான் செல்ல முடியும் என்றால் சரிதான். சர்வே எண். 378/5 வழியாகத்தான் வாதியின் வீட்டிற்கு செல்லக்கூடிய பாதை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

2) சர்வே எண். 378/5 பிரதிவாதிகள் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து பாதை என்பதை மறைத்து 1ம் பிரதிவாதி எனது மருமகன் என்ற முறையில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஊரில் தனி நபர்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் 1ம் பிரதிவாதியின் மாமானாரான என்னை அழைத்து சாட்சியம் அளிக்க வைத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் கிடைக்க கூடியது என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.12 P.M

சாட்சியின் கையொப்பம்.